# பரிசுத்த ஆவி என்பதின் பேரில் கேள்விகளும் பதில்களும்

2



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

# கேள்வி: 60



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

---

# செய்தி: 57-10-02 எபிரெயர் நிருபத்தின் பேரிலான கேள்விகளும் பதில்களும் COD #6

---

Q.60. **"நாம் எல்லாரும் ஒரே ஆவியி னாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ் நானம் பண்ணப்பட்டோம்"** (இந்த கேள்வி யில் தான் நான் இருந்தேன் என்பது உங்கள் எல்லோருக்கும் ஞாபகமிருக்கும். இப்பொழுது அது உண்மையாகவே 1 கொரிந்தியர் 12-ல் கண்டுபிடிக்கப்பட்டது). **அந்த நேரத்தில் நாம்... புதிய பிறப்பை ஏற்றுக் கொள்கிறோம், இதுவே சம்பவிக்கிறது இது. இது பரிசுத்த ஆவியின் அபிஷேகமா அல்லது பின்னர் பெற வேண்டிய ஒரு ஞானஸ் நானமா, அல்லது இது ஒரு நிரப்பப்படுதலா?**

362. இப்பொழுது இது வேறொன்றிற்கும் இடமில்லாத ஒரு கேள்வியாய் உள்ளது, எனவே நாம் அந்த ஒன்றின் பேரில் நம்முடைய நேரத்தை இன்றிரவும், நாளை இரவும் கூட செலவழிக்கக் கூடும். இது நேரத்தை எடுத்துவிடும். இது இதை எடுத்து முழு வேதாகமத்துடனும் ஒன்றாக இணைப்போம். ஒவ்வொரு வேதவாக்கியமும் வேதத்தில் உள்ள மற்ற ஒவ்வொரு வேதவாக்கியத்தோடும் சரியாக ஒன்றாக இணைக்கப்பட வேண்டும்.

363. ஆனால் அதை சுருக்கமாக கூற முயற்சிக்கிறேன், அதை எப்படி கூற வேண்டும் என்று நான் அறிந்த முறையில் தெளிவாகக் கூறுகிறேன்; நீங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும் போது, அப்பொழுது நீங்கள் புதிய பிறப்பை உடையவராயிருக்கிறீர்கள்.

நீங்கள் கர்த்தரை விசுவாசிக்கும்போது, நீங்கள் ஒரு புதிய சிந்தையை, ஒரு புதிய ஜீவனைப் பெற்றுக் கொள்கிறீர்கள், ஆனால் அது பரிசுத்த ஆவியின் அபி ஷேகமல்ல. புரிகிறதா? நீங்கள் விசுவாசிக் கும்போது, நீங்கள் புதிய பிறப்பை பெற்றுக் கொள்கிறீர்கள், நீங்கள் நித்திய ஜீவனை பெற்றிருக்கிறீர்கள். அது தேவன் உங்களுக்கு அளிக்கின்ற வரத்தை ஏற்றுக் கொள்வதனால் இராஜாதிபத்திய கிருபையி னூடாக உங்களுக்கு அளிக்கப்படுகிற ஒரு தேவனுடைய வரமாய் உள்ளது. பாருங் கள். “என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு.” நித்திய ஜீவனை உடையவராயிருத்தல்; அது புதிய பிறப் பாய் உள்ளது, நீங்கள் மனமாற்றமடைந் துள்ளீர்கள், அதன் பொருள் என்னவெனில்

நீங்கள் "மேலான நிலையில் மாற்றப்பட் டிருக்கிறீர்கள்" என்பதாகும்.

364. ஆனால் பரிசுத்த ஆவியின் அபி ஷேகம் உங்களை கிறிஸ்துவின் சரீரத்திற் குள்ளாகவைத்து, ஊழியத்திற்கான வரங் களுக்கு கீழ்படுத்துகிறது. அது உங்களை ஒருபோதும் ஒரு கிறிஸ்தவனாக்கவில்லை யென்றாலும், அது சரீர வரங்களில் உங் களை பொருத்துகிறது. புரிகிறதா? "இப் பொழுது ஒரே ஆவியினால்" (1 கொரிந் தியர் 12) "நாம் ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம். இப் பொழுது," பவுல், வித்தியாசமான வரங் கள் உண்டு, இந்த சரீரத்தில் ஒன்பது வரங்கள் உள்ளன" என்று கூறுகிறான். இந்த சரீரத்தில்... நீங்கள் இந்த வரங்களில் ஒன்றை சுதந்தரித்துக்கொள்ள இந்த சரீரத் திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்

டிருக்க வேண்டும். அவைகள் சரீரத்தினால் உண்டாகின்றன.

365. ஆனால் இப்பொழுது நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வதைப் பொறுத்தமட்டில், ஒரு கிறிஸ்தவராயிருக்க வேண்டும், நீங்கள் விசுவாசிக்கிற அந்த நொடிப் பொழுதிலிருந்தே நீங்கள் ஒரு கிறிஸ்தவராயிருக்கிறீர்கள். இப்பொழுது, அது பாவனை விசுவாசமல்ல, அது உண்மையாகவே கர்த்தராகிய இயேசுவின் மேல் விசுவாசம்வைத்து, அவரை உங்க ளுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்வதாகும்; நீங்கள் சரியாக அங்கே மீண்டும் பிறக்கும் போது, நித்திய ஜீவனை பெற்றுக் கொள்கிறீர்கள். அப்பொழுது தேவன் உங்களுக்குள்ளாக வருகிறார்.

366. இப்பொழுது கவனியுங்கள், நித்திய ஜீவன்; இயேசு, "என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசு வாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட் பட்டிருக்கிறான்" என்றார். அப்பொழுதே நீங்கள் ஒரு புதிய சிருஷ்டியாயிருக் கிறீர்கள். அதன்பின்னர் அப்போஸ்தலர் 19ம் அதிகாரத்தில், அந்த ஜனங்களில் சிலரை பவுல் சந்தித்திருந்தான். அவர்கள் அப்பொல்லோ என்னும் பேர் கொண்ட ஒரு மனமாற்றமடைந்திருந்த நியாய சாஸ்திரியை தங்களுக்கு ஒரு பிரசங்கியாக உடையவர்களாயிருந்தனர். அப் பொல்லோ வேதாகமங்களில் வல்லவனு மாயிருந்து, அவன் இயேசுவே கிறிஸ்து

என்று வேத வாக்கியங்களைக் கொண்டு நிரூபித்துக் கொண்டிருந்தான். புரிகிறதா?

367. இப்பொழுது கவனியுங்கள். அப்பொல்லோ வார்த்தையினூடாக, வார்த் தையினாலே நிரூபித்துக் கொண்டிருந்தான். "விசுவாசம் கேட்பதனால், வார்த்தையைக் கேட்பதனால் வரும். என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவா சிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு." உங்களுக்கு இது புரிகிறதா? அப் பொல்லோ வார்த்தையினால் இயேசுவே கிறிஸ்து என்று நிரூபித்துக் கொண் டிருந்தான். அவர்கள் மிகுந்த சந்தோ ஷத்தை உடையவர்களாய், வார்த்தையை ஏற்றுக் கொண்டிருந்தனர், அதே சமயத்தில் யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தை மாத்திரமே அறிந்திருந்தனர்.

368. பவுல் மேடான தேசங்கள் வழி யாய்ப் போய், எபேசுவுக்கு வந்த போது, அவன் இந்த சீஷர்களைக் கண்டான், அப்பொழுது அவன், “நீங்கள் *விசுவாசி களானபோது*, பரிசுத்த ஆவியைப் பெற்றீர் களா?” என்று கேட்டான். புரிகிறதா?

369. இப்பொழுது, நீங்கள் விசுவா சிக்கும்போது, இயேசு, “நீங்கள் நித்திய ஜீவனை உடையவர்களாயிருக்கிறீர்கள்” என்றார். அதுதான் புதிய பிறப்பு. அதுவே உங்களுடைய மனமாற்றமாய், மாற்றமாய் உள்ளது. ஆனால் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் என்பது நீங்கள் ஞானஸ் நானம் பண்ணப்பட்டு, உங்கள் மூலமாக கிரியை செய்கிற இந்த ஒன்பது ஆவிக் குரிய பிரகாரமான வரங்களுக்கும் கீழ் படியச் செய்கிற தேவனுடைய வல்லமை

யாய் இருக்கிறது; நீங்கள் இந்த சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்படும்போது, பிரசங்கித்தல், சுவிசேஷகர்கள், அப்போஸ்தலர்கள், போதகர்கள், தீர்க்கதரிசிகள் போன்றவை. சரீரத்தின் எல்லா வரங்களும் இதற்குள் உண்டாகின்றன. அது உங்களை ஒருபோதும் அதற்கு மேலாக ஒரு கிறிஸ்தவராக ஆக்குகிறதில்லை, அது ஜீவனுள்ள தேவனுடைய சபையில் ஒரு பணிவிடை ஆவியாயிருக்கும்படியான ஒரு ஸ்தானத்தில் உங்களை பொருத்துகிறது. இப்பொழுது உங்களுக்கு இது புரிகிறதா? புரிகிறதா?

370. இப்பொழுது கேள்வியானது. நாம் ஒவ்வொன்றாக பதிலுரைப்போம், மூன்று கேள்விகள் உள்ளன.

**“நாம் எல்லாரும் ஒரே ஆவியினால் ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப் பட்டோம்.”**

அது சரியே, 1 கொரிந்தியர் 12-ம் அதிகாரம் அதற்கு பதிலை அளிக்கும். சரி.

**இது சம்பவிக்கும் அந்த நேரத்திலா நாம் புதிய பிறப்பை பெற்றுக்கொள்கிறோம்? அது எப்பொழுது?**

371. அதைத்தான் அவர்கள் அறிந்து கொள்ள விரும்புகிறார்கள், ஆம். “ஒரே ஆவியினால்...” இல்லை. இல்லை.

“நாம் எல்லோரும் ஒரே ஆவியினால் ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம்” பாருங்கள், அது புதிய பிறப்பு துவங்கும்போதல்ல, நீங்கள் கர்த்த ராகிய இயேசுவின் மேல் *விசுவாசம்*

வைக்கும்போது புதிய பிறப்பு துவங்கு கிறது.

372. இப்பொழுது பாருங்கள், அங்கு ஒரு... ஒரு காரியமும் இல்லை. இப் பொழுது கவனியுங்கள். நீங்கள் விசு வாசிப்பதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்? நீங்கள் அதைப் பார்க்கிலும் வேறென்ன செய்ய முடியும்? நீங்கள் அதை விசுவாசிப்பதைக் காட்டிலும் அதைக் குறித்து வேறென்ன செய்ய முடியும்? அதைத் தவிர நீங்கள் செய்யக் கூடிய ஒரு காரியத்தைக் கூறுங்கள். அதை விசுவாசிப்பதற்கு புறம்பாக நீங்கள் செய்யக் கூடியது ஒரு காரியமும் இல்லை. இப்பொழுது, உங்களுடைய விசுவாசத் திற்கு புறம்பாகஎந்த காரியமாவது உண் டானால், அது உங்களுடைய சொந்த

செய்கையாயில்லையென்றால், அது ஒரு தேவனுடைய செயலாய் உள்ளது. ஆகையால்...

373. இப்பொழுது நீங்கள். அதை நாம் கூறினால். ஏராளமான நேரங்களில், பரிசுத்த ஆவி என்பது, "அந்நிய பாஷையில் பேசுவதே அதற்கான ஆரம்ப ஆதாரம்" என்று அநேக சமயங்களில் ஜனங்கள் ஏற்றுக் கொள்வதை நான் பார்த்திருக்கிறேன். சில சமயங்களில் ஜனங்களை குலுக்கி, அல்லது அவர்களை அடித்து, அவர்களைத் தட்டி, "அதைக் கூறு. அதைக் கூறு. அதைக் கூறு" என்கிறார்கள். உங்களுக்குத் தெரியும், ஒரே வார்த்தையை திருப்பித் திருப்பிக் கூறி, "அதைக் கூறு. அதைக் கூறு. அதைக் கூறு" என்கின்றனர். பாருங்கள், அது நீங்களாகவே செய்து

கொண்டிருக்கிற ஏதோ ஒரு காரியமாய் உள்ளது. அதுவல்ல. அதுவல்ல. அது-அது ஒன்றுமல்ல. நீங்கள் அந்நிய பாஷையின் குழப்பத்தைப் பெற்றுக் கொள்ளலாம். நீங்கள் ஏராளமான காரியங்களை, உணர்ச்சிவசப்படுதல்களைப் பெற்றுக் கொள்ளலாம், ஆனால் உங்களுடைய சொந்த தனிப்பட்ட விசுவாசத்திற்கு புறம் பேயிருந்து எந்த காரியமாவது உண்டா னால், அது உங்களுக்கு கொடுக்கப்பட்ட ஒரு தேவனுடைய தெய்வீக வரமாயிருக்க வேண்டும். புரிகிறதா?

374. "நாம் எல்லோரும் ஒரே ஆவியி னால் ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ் நானம் பண்ணப்பட்டோம்." அது சரியே, பாருங்கள். பரிசுத்த ஆவியின் அபிஷேகம் என்பது புதியப் பிறப்பிலிருந்து ஒரு

வித்தியாசமான செய்கையாயிருக்கிறது. ஒன்று ஒரு பிறப்பாயுள்ளது, ஒன்று ஒரு அபிஷேகமாயுள்ளது. ஒன்று உங்களுக்கு நித்திய ஜீவனைக் கொண்டு வருகிறது, மற்றொன்று உங்களுக்கு வல்லமையை அளிக்கிறது. அது செயல்படும்படியாக நித்திய ஜீவனுக்குள்ளாக வல்லமையை அளிக்கிறது. பாருங்கள், இப்பொழுது நீங்கள் அதைப் புரிந்து கொண்டீர்களா? சரி, சரி.

375. இப்பொழுது இங்கே மற்றொன்று உள்ளது, இரண்டாவதிற்கு வருவோம், இந்த இரவு நான் அறிந்த மிகச் சிறந்த பதில்களைக் கூறியிருந்தேன்.





# கேள்வி: 38



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 54-05-15 கேள்விகளும் பதில்களும் COD #4

Q .38. **பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ள அந்நிய பாஷையில் பேசவேண்டும் என்று இந்த சபை போதிக்கின்றதா?**

262. இல்லை, ஐயா. இல்லை, நாங்கள் அப்படி செய்வதில்லை. அந்நிய பாஷை யில் பேசுவது பரிசுத்த ஆவியின் வரமா கும், பாருங்கள், அது பரிசுத்த ஆவி அல்ல. அது ஒரு வரமாகும். இந்த மரம் ஒன்பது விதமான கனிகளைக் கொண் டிருக்கிறது. அது சரியா?

263. நீங்கள் ஒரு ஆப்பிள் மரத்தை பார்க்கையில், அது ஆப்பிள் பழங்களைக்

கொண்டிருக்குமானால், அது ஆப்பிள் மரம் என்கிறீர்கள். ஒரு மரத்தை பார்க்கும் போது, அது பேரிக்காய்களைக் கொண் டிருக்குமானால், அது பேரிக்காய் மரம் என்று கூறுகிறீர்கள். அதன் மேல் காட்டத்தி மரப்பட்டை இருந்து, அதில் பேரிக்காய்கள் இருந்தாலும் சரி, அதனுடைய ஜீவன் என்ன? அதன் ஜீவன் பேரிக்காய் மர ஜீவன் தான். அது சரியா?

264. இப்பொழுது, இந்த தேவனுடைய மரமானது ஒன்பது ஆவிக்குரிய கனி களையுடையதாக இருக்கிறது. அது சரியா? சரி? அங்கே வித்தியாசப்பட்ட... "ஒருவ னுக்கு ஆவியினாலே ஞானத்தை போதிக் கும்... வேறொருவனுக்கு அந்த ஆவியி னாலேயே அறிவை உணர்த்தும் வசனமும் வேறொருவனுக்கு புரிந்து கொள்ளுதலும்,

பாஷைகளை வியாக்கியானம் பண்ணு தலும் அளிக்கப்படுகின்றது," என்றார். ஒன்பது வித்தியாசமான ஆவிக்குரிய வரங்கள் இந்த தேவனுடைய மரத்தின் மீது வளர்கின்றது. அது சரியா? நல்லது, இப் பொழுது, அந்நிய பாஷையில் பேசுவது மாத்திரம் ஒன்றே ஒன்றல்ல, இன்னும் மற்றவைகளும் கூட இருக்கின்றன.

265. இப்பொழுது நீங்கள் அந்நிய பாஷையில் பேசி இன்னுமாக பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளாமல் இருக்க லாம். இப்பொழுது அதை சற்று நினைவில் கொள்ளுங்கள். நான் சரியாக... சூன்யக் காரிகள் மந்திரவாதிகள் வந்து அந்நிய பாஷையில் பேசுவதை நான் கண்டிருக் கிறேன், அவர்கள் பரிசுத்த ஆவியை உடையவர்கள் அல்ல. உங்களுக்குத் தெரி

யும், அவர்கள் மேலே வந்து சத்தமிடு வதையும் குதிப்பதையும் நான் கண்டிருக் கிறேன், அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெறாமல் உள்ளனர். சமீபமாக நான் ஒரு கார்ன்-நடனத்தில் நின்று கொண்டிருந் தேன், வெளியே... அங்கே டௌக்லாஸ், அரிசோனாவில் அங்கே ஒரு சிறிய துண்டு. அங்கே அவர்கள் நடத்தும் கார்ன்-நடனத்தை கண்டிருக்கிறேன், அந்த மந்திரவாதி வந்து பயங்கராமாகச் செய்து கொண்டிருந்தான், எல்லாக் காரியமும் செய்து கொண்டிருந்து அங்கே தன் மீது தூசியை போட்டுக்கொண்டான். அப்படி யென்றால் அவன் இரட்சிக்கப்பட்டிருக் கிறான் என்றல்ல. அந்த மனிதன் ஒரு - ஒரு மந்திரவாதி ஆவான்.

266. நான் இந்தியாவில் இந்தியாவிற்கு சென்றிருந்த போது... ஆப்பிரிக்காவில் மந்திரவாதிகள் வந்து தங்கள் மந்திரங்களினாலே எனக்கு சவால் விட்டதையும், ஒரு மனித மண்டை ஓட்டிலிருந்து இரத்தத்தை குடித்ததையும் நான் கண்டிருக்கிறேன். அது சரி. நீ அதை நேரடியாக சந்திக்கையில் எதைக் குறித்து நீ பேசிக் கொண்டிருக்கிறாய் என்பதை அறிந்திருப்பது நல்லது. ஆனால் சர்வல்லமையுள்ள தேவன் அந்த மனிதன் அசையவும் கூடாத விதத்தில் அவனை கட்டிப்போட்டதையும் நான் கண்டிருக்கிறேன். ஆகவே அப்பொழுது, அதைப் போன்ற அவனுடைய கண்ணாடிக் கண்கள், அவர்கள் அவனை தூக்கிச் சென்றனர். ஆம், ஐயா.

267. சகோதரனே, தேவன் உண்மையா யிருக்கிறார்! அது உண்மை. ஆனால் தேவன் ஆவியாயிருக்கிறார், அந்நிய பாஷையில் பேசுவதிலும் அல்லது, இது, அது அல்லது மற்றதில் மாத்திரமே கட்டுப் படுத்தப்பட்டவர் அல்ல. நான் கூறுவது என்னவென்றால் எந்த ஒரு மனிதனும்... இங்கே சபையில் இருக்கின்ற பிரச்சனை அது தான். பாருங்கள், நீங்கள்... பெந்தெ கொஸ்தேயினர் அந்த ஒரு காரியத்தின் மீது கட்டுப்பாடற்ற உணர்ச்சிக்கு ஆட்பட்ட வர்களாயினர். அவர்கள் ஜனங்களிடம் சென்று... அவர்கள் மீது கைகளை வைத்து, அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ள ஏதுவாக செய்வதற்கு பதிலாக, அவர்களை பீடத்தண்டை கொண்டு சென்று முதுகின் மீது அவர்களை அடிக்க ஆரம் பித்து "அதைப் பேசு! அதைப் பேசு!

அதைப் பேசு!” என்று சத்தமிடுகின்றனர். மேலும் மேலும் குழப்பத்தை பெற்றுக் கொள்ளும் வரை ஒரு சொல்லைக் கூறுகின்றனர், அது அந்நிய பாஷை அல்ல.

268. ஒரு உண்மையான பரிசுத்த ஆவி நபரானவன் தேவனுடைய ஆவியினால் பிறந்திருப்பானானால், அவன் தேவனுக் குரிய ஜீவியத்தைச் செய்வான். அந்த மனிதர்களில் சிலர் மோசமான ஜீவியங் களைச் செய்து கொண்டிருக்கின்றனர். நீங்கள் அதை அறிந்திருக்கிறீர்கள், அவர் கள் அப்படியாக இல்லை என்று அவர் களுடைய கனிகள் நிரூபிக்கிறது. இயேசு, “அவர்களுடைய கனிகளினாலே நீங்கள் அவர்களை அறிந்து கொள்வீர்கள்” என்றார். ஆகவே ஆவியின் கனியானது

அந்நிய பாஷையில் பேசுவது அல்ல, அது ஆவியினுடைய வரம் ஆகும்.

269. இந்த அந்நிய பாஷைகளையும் மக்கள் பேசுவதையும் அவர்கள் கேட்ட போது. பேதுரு, “மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ் நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொ ழுது பரிசுத்த ஆவியைப் பெறுவீர்கள்” என்று ஒருபோதும் கூறவில்லை. அவன், “பரிசுத்த ஆவியின் வரத்தை பெறுவீர்கள்” என்றான். அது அவர்கள் பெறுகின்ற பரிசுத்த ஆவியின் வரங்களில் ஒன்றாகும். ஆமென். சரி. நாம் சீக்கரமாக கடந்து செல்ல வேண்டும்.



# கேள்வி: 12



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 54-01-03M கேள்விகளும் பதில்களும் COD #2

Q.12. **சகோதரன் பிரன்ஹாம், "இந்த மனிதன் பரிசுத்த ஆவியைப் பெற்றிருக் கிறார், ஏனென்றால் 'இதை' செய்தார்" அல்லது "இந்த ஸ்திரீ பரிசுத்த ஆவியை பெற்றிருக்கிறாள், ஏனெனில் 'அதை' செய்தாள்" என்று அறிந்து கூற நான் விரும்புகிறேன்.**

153. இதை அறிந்து கொள்ள உங்களுக்கு உலகத்தில் ஒரு வழியும் கிடையாது. அது சரி. நீங்கள் அறிந்து கொள்ள உலகத்திலே ஒரு வழியும் இல்லை, நாம் ஒருவரையும் நியாயம் தீர்ப்பதற்காக அல்ல, தேவன் தான்

நியாயாதிபதியாய் இருக்கின்றார், நியா யந்தீர்க்க நாம் இல்லை. பாருங்கள்? நீங்கள் சுவிசேஷத்தை மாத்திரம் பிரசங் கியுங்கள், வாழுங்கள்...

154. சில காலத்திற்கு முன் ஒரு மனிதன் என்னிடம் வந்தார். கடந்த இரவு நான் கூறியதைக் குறித்து பிரசங்கித்துக் கொண்டிருந்தேன். அவர் என் வீட்டிற்கு வந்து, “சகோதரன் பிரன்ஹாம் தான் – நான் - நான். விரும்பினது... நான் என் பாவங் களை அகற்ற விரும்புகிறேன். நான் ஒரு கிறிஸ்தவனாக இருக்க விரும்புகிறேன்” என்று கூறி அமர்ந்தார்.

155. அவர் “சர்வேதச பிரசித்த பெற்ற, மகத்தான மனிதனாகிய பில்லிகிரகாம் என்னும் பெயர் கொண்ட நபரைக் குறித்து நான் கேட்டிருக்கிறேன். ஆகையால் அவ

ருடைய கூட்டங்களுக்கு நான் சென்றேன், அவர் கிறிஸ்தவர்களாக இருக்க விரும்பும் எல்லாரும் உங்கள் கரங்களை உயர்த்தி கிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளுங்கள்' என்று கூறினார். ஆகையால் தான் என்னுடைய கரங்களை உயர்த்தினேன், அவர் 'இப்பொழுது நாமெல்லாரும் எழுந்து ஜெபம் செய் வோம்" என்றார். ஆகையால் நான் எழுந்து ஜெபித்தேன்... (என்னை மன்னிக்கவும்) எவ்வளவு உத்தமமாக ஜெபிக்க முடியுமோ அவ்வளவு உத்தமமாக ஜெபித்தேன். "ஆனால் அது எனக்கு ஒரு நன்மையையும் அளிக்கவில்லை" என்றார்.

156. அவர் "அதன் பிறகு நான் ஓரல் ராபர்ட்ஸ் கூட்டங்களுக்குச் சென்றேன்." அவர், "நான் அவரைக் குறித்து கேள்வி பட்டிருக்கிறேன். அங்கே அவர்கள்

அவ்வளவாய் மகிழ்ந்து களிகூர்வதைக் குறித்து நான் கேள்விப்பட்டிருக்கிறேன்" என்றார். மேலும் அவர், "நான் ஓரல் ராபர்ஸிடம் சென்று ஒரு கிறிஸ்தவனாக மாற நான் என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டேன். அவர் "நீங்கள் அங்கே செல்லுங்கள்..." நான் பில்லி கிரகாமின் கூட்டத்தில் கைகளை உயர்த்தினேன் என்று கூறினேன். அதற்கு அவர் "நீங்கள் அந்த கேள்வி கேட்கப்படும் அறையில் சென்று சந்தோஷமாக அந்நிய பாதைகளில் பேசும் வரை இருங்கள்," என்றார். அவர் மேலும், "நான் அங்கே உள்ளே சென்று அந்நிய பாஷையில் பேச ஆரம்பிக்கும் வரை நான் ஜெபித்தேன், ஆனால் நான் வெளியே வந்த பிறகு அது எனக்கு ஒரு நன்மையும் அளிக்கவில்லை" என்று கூறினார்.

157. அவர், "அதன் பிறகு நான் வேறொரு கூட்டத்திற்கு சென்றேன், அவர்கள் நான் பரிசுத்தமாக்கப்படவில்லை என்று என்னிடம் கூறினர். 'நீங்கள் பரிசுத்த மாக்கப்பட்டு, மகிழ்ந்து சப்தமிட வேண்டும், போதுமான சந்தோஷத்தைப் பெற வேண்டும்' ஆகவே நான் சத்தமிடும் வரை ஜெபித்தேன், ஆனால் இன்னுமாய்" என்றார்.

158. நான் "சகோதரனே, அந்த எல்லாக் காரியங்களும் சரியானவைகளே, ஒவ் வொன்றும் நன்மையானதே. உன்னுடைய கரங்களை உயர்த்துதல், அந்நிய பாஷை களில் பேசுதல், சத்தமிடுதல், அந்த ஒவ் வொரு காரியத்தையும் நான் விசுவாசிக் கிறேன், ஆனால் இருந்த போதிலும் அந்த காரியம் அதுவல்ல, அது இயேசு கிறிஸ்து

வாகிய அந்த நபரை ஏற்றுக்கொள்வது ஆகும். பாருங்கள்?" பாருங்கள் அது...

159. இவைகள் எல்லாம் தன்மைகளாகும். சத்தமிடுதல், அந்நிய பாஷைகளில் பேசுதல், ஓடுதல், குதித்தல், அழுதல், ஜெபம்செய்தல், பேசுதல் ஆகிய இவைகளெல்லாம் தொடர்ந்து வருகின்ற தன்மைகள் மாத்திரமே. முதலாவது காரியம் கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொள்வது மாத்திரமே. பாருங்கள்? ஆகையால் அங்கே நாம் கூறத்தக்கதான சாட்சிகள் இல்லை. ஏனென்றால் ஒரு மனிதன் அழுகின்றான் என்பதினாலா? ஒரு மனிதன் மிகவுமாக அழுது, அழுது முதலைக் கண்ணீர் வடித்து, ஆனால் இன்னுமாய் அவன் தன்னால் இயன்ற மட்டும் மிகப் பெரிய பாவியாயிருப்பதை நான் கண்டிருக்கிறேன்.

160. கவனியுங்கள், இயேசுவிற்கு ஆடு களைத் தவிர வேறொன்றும் கிடையாது. அது சரிதானே? மேய்ப்பன் தன் ஆடுகளை அறிந்திருக்கிறான். வெள்ளாட்டின் சப் தத்தை இங்கிருப்பவர்கள் யாராவது கேட்டிருக்கிறீர்களா? நல்லது, சகோதரனே, நீங்கள் வித்தியாசத்தை அறிந்து கொள்ள வேண்டுமானால் நீங்கள் மேய்ப்பர்களாய் இருத்தல் நல்லது. ஒரு வெள்ளாடு, செம்மறியாட்டைப் போலவே சப்தமிடும். ஹூ. அந்த பழைய வெள்ளாட்டை எங்கேயாவது நிறுத்திவைத்து, ஒரு சிறிய செம்மறியாட்டை வேறு பக்கமாக நிறுத்தி வீர்களானால், “பா... பா...” என்ற சத்தம் ஒரே விதத்தில் அமைந்திருக்கும்.

161. அவர்கள் பீடத்தின் கீழே “ஓ தேவனே” என்று அழுது “ஓ தேவனே” என்று விம்மிக் கொண்டிருப்பதை நான்

கேட்டிருக்கிறேன், ஆனால் முழு நேரமும் வெள்ளாடாய் இருக்கின்றனர். அது சரி, சப்தமிடுதல்? நல்லது, என்னே, அவர்கள் மிகவுமாய் சப்தமிட்டு, தரையில் இங்கும் அங்கமாக ஒடி மேலும் கீழுமாக குதிப் பதை நான் கண்டிருக்கிறேன்.

162. இப்பொழுது, “சகோதரன் பிரன் ஹாமே, அழுவதில் நீங்கள் நம்பிக்கைக் கொள்வதில்லையா?” என்று நீங்கள் கூறலாம்.

163. நீங்கள் என்னைத் தவறாக எடுத்துக் கொள்ளாதீர்கள், நிச்சயமாக, அழுவதில் நான் நம்பிக்கைக் கொண்டுள் ளேன். ஆனால் அது சாட்சியைக் குறிக்க வில்லை என்று நான் கூறுகிறேன், பாருங் கள், ஏனென்றால் அவை இரண்டுமே அழுகின்றன. அவர்களால் எவ்வளவு

முடியுமோ அவ்வளவு அதிகமாக சப்தமிடு கின்றனர் என்பதை நான் கண்டிருக்கிறேன். ஆம் ஐயா. பிறகு அவ்வாறே இருந்து விடுகின்றனர். நான் எதைக் குறித்து பேசிக் கொண்டிருக்கின்றேனோ, அவ்விதமாக உங்களில் அநேகர் இருந்து வருகின்றனர். அவர்கள் அந்நிய பாஷைகளில் பேசுவதை நான் கேட்டிருக்கிறேன், பிறகு அவர்கள் வெளியில் சென்று எவ்வித வாழ்க்கை யையும் வாழ்ந்து எதையாகிலும் செய்கின் றனர். ஆகவே, அது ஒரு அடையாளம் இல்லை.

ஆனால் நீங்கள் “நீங்கள் அதற்கு எதிராக உள்ளீர்கள்,” என்று கூறலாம்.

164. ஓ, இல்லை. அந்நிய பாஷை களில் பேசுவதில் நான் விசுவாசம் கொண் டிருக்கிறேன், அது சபையில் உள்ள

தேவனுடைய வரம் ஆகும். அதை நான் வெளியே எடுத்தேனென்றால், நான் தேவனுடைய ஒரு பாகத்தை வெளியே எடுத்து விடுவேன். நான் என்னுடைய நாவை வெளியே எடுத்தால் - என்னுடைய நாக்கு என்னுடைய சரீரத்தின் ஒரு அவயம், அப்படியானால் முழுமையான சரீரம் எனக்கு இல்லை. இயேசு கிறிஸ்துவின் சரீரத்திற்குள் நாவுகள் இருக்கின்றன. இங்கே இருக்கின்ற இயேசு கிறிஸ்துவின் சரீரம் நாவுகளைக் கொண்டதாய் உள்ளது; ஆகையால் நீ அதை வெளியே எடுத்தால், கிறிஸ்துவினுடைய ஒரு பாகத்தை நீ வெளியே எடுக்கின்றாய். ஆனால் அது தான் சரீரம் என்று நீ இன்னுமாய் அதைக் கூறமுடியாது, பாருங்கள். பாருங்கள்? பாருங்கள்?

165. ஆனால் அது கிறிஸ்து இயேசுவை அந்த நபரை ஏற்றுக் கொள்வதாகும், அதன் பிறகு இந்த மற்றைய காரியங்கள் சரியாக உள்ளே வந்து ஒன்றோடு ஒன்றாக இணைந்து பொருந்திவிடும். ஆகவே இக்காலையில் இச்சரீரத்தின் ஒவ்வொரு அங்கத்தினனும் இந்த சிறிய மக்கள் குழு, நாம் ஒவ்வாருவரும் திரைகளை நம் பக்கமாக இழுத்து வைத்து, இங்கிருக்கும் ஒவ்வொருவரும் கிறிஸ்து இயேசு என்னும் நபரை பெற்றுக் கொள்வோமானால், ஒரு குழப்பமோ, அல்லது விவாதமோ நம் மத்தியில் இருக்கவே இருக்காது. அங்கே பரிபூரண அன்பு மாத்திரமே இருக்கும். நீங்கள் இன்னுமாய் இதை அல்லது அதை விசுவாசித்தாலும் முழுவதும் அன்பி னாலே நிறையப்பட்டிருக்கும், நீங்கள்... பாருங்கள்? அது தான். இப்பொழுது,

இயேசு, “அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்” என்று கூறினார். ஆகவே ஆவியின் கனி அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், சாந்தம், விசுவாசம் என்பதாகும்.

166. இப்பொழுது, நான்... ஒரு மனிதன் ஒரு கிறிஸ்தவன் என்று சாட்சி பகருகின்ற ஒரு காரியத்தை, என்னுடைய மதிப்பீட்டை, எனக்கு தெரிந்த ஒன்றை நான் கூறுகிறேன். அது என்ன என்பது உங்களுக்குத் தெரியுமா? அது பெரு முயற்சி கடும் முயற்சி செய்கின்ற ஆத்துமாவாகும். தேவனுக்காக மிகவுமாக பசிதாகம் கொண்டிருக்கிற ஒரு மனிதன். அவர்கள்... இரவும் பகலுமாய், அவர்களால் - அவர்களால் தாங்க முடியாது. அவர்கள் - அவர்கள் அவர்கள் தேவனுக்

கென்று ஏதாவதொன்றைச் செய்தாக வேண்டுமென்றிருப்பார்கள். அவர்கள் முழுவதுமாக அன்பினால் நிறைந்து... அவர்கள் ஆத்துமா கடும் முயற்சி செய்யும், எப்பொழுதும், எந்நேரமும் பிரயாசப்பட்டுக்கொண்டே இருக்கும். வேதம் "கண்ணீரோடே விதைக்கிறவன் கெம்பீரத்தோடே அறுப்பான். அறுத்த அருமையான அரிகளை சுமந்து கொண்டு கெம்பீரத்தோடே திரும்பி வருவான்" என்று கூறுகின்றது. அது சரியா? அந்த எல்லாக் காரியங்களும்.

167. இப்பொழுது, கவனியுங்கள், அங்கே இந்த சபையானது... இந்த காலை வேளையில் நான் கூறுவேனானால், இக்கூட்ட மக்களும் நானும்... தேவன், "இப்பொழுது, வில்லியம் பிரன்ஹாம், கவனி, அந்த மக்கள் குழுவிற்கு நீ என்ன

கூறுகின்றாயோ, அதற்கு நீ பதிலுரைக்கும்படியாக நான் செய்யப் போகிறேன். இப்பொழுது, அவர்கள் எல்லாரும் சப்தமிட வேண்டும் என்று நீ விரும்புகிறாயா?" என்று கூறினால்.

"நிச்சயமாக, அவர்கள் சப்தமிட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்".

"அவர்கள் எல்லாரும் அந்நிய பாஷையில் பேச வேண்டும் என்று நீ விரும்புகிறாயா?"

"ஒவ்வொருவரும் அவ்வாறு செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிறேன்"

அவர்கள் "எல்லாரும் ஆவியில் நடனமாட வேண்டும் என்று விரும்புகிறாயா?"

“ஒவ்வொருவரும் அவ்வாறே செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிறேன்”

168. “சரி, மிகவும் நல்லது, ஆனால் அவர்களை வைத்து நீ என்ன செய்யப் போகிறாய்?” ஹ - ஹூம்.

169. “ஜெபிக்கவேண்டும் என்று தங்கள் இருதயத்தில் பாரம் கொண்டவர் களாய், இந்த பீடத்தின் கீழே இருந்து, இங்கே இரவும் பகலும் தங்கியிருந்து, மற்றைய காரியங்கள் உள்ள ஒரு சபை; அவர்கள் வீட்டிலே எந்நேரமும் ஜெபத்தி லேயே இருந்து, மக்களை தேவனண்டை யில் வரும்படிச் செய்து, தாழ்மையாய் நடந்து, மருத்துவமனைகளில் சென்று நோயாளிகளைச் சந்தித்து, சபைக்கு மக்கள் வரும்படிச் செய்து, சரியானவைகளைச் செய்து கொண்டிருக்கின்ற ஒரு சபை

யையே நான் கொண்டிருப்பேன். அந்த மற்ற காரியங்கள் யாவும் ஒன்றாக இருந்து அந்த மற்றவை சரியாய் இருந்த போதிலும், அது சபைக்குள்ளானதாயிருந்தாலும், இவைகளைக் காட்டிலும் நான் அந்த சபையையே (ஆத்துமா பாரங்கொண்ட சபையை) நான் பெற்றிருக்க விரும்புகிறேன்."

170. ஆனால் அதை நான் கொண்டிருக்க விரும்பினால், அந்த ஒன்றை நான் முதலாவதாக வைப்பேன். ஏனெனில் நீ அதை பெற்றுக் கொள்வாயானால், மற்றவை நடந்தேறும். ஹு ஹு. பாருங்கள்? நீங்கள் அதைப் பெற்றுக் கொள்வீர்களானால், நீங்கள் தேவனுக்காக மிகவுமாக பசி கொள்வீர்கள், சத்தமிடுவது தானாக நடை பெறும். நீங்கள் தேவனுக்கென்று மிகுந்த பசியடைவீர்களானால் அந்நிய

பாஷைகளில் பேசுவது நிகழும். நீங்கள் தேவனுக்காக மிகவும் பசியடைவீர்களானால், நீங்கள் தாமே பசி கொண்டவர்களாகவே இருப்பீர்கள். இப்பொழுது நீங்கள் தாமே வேற்றுமை சிந்தை கொண்டவர்களாய் ஆவதை நீங்கள் கவனிப்பீர்களானால், ஞாபகம் கொள்ளுங்கள், அதை கவனியுங்கள், அங்கே வேறொரு ஆவி கிரியை செய்ய முயல்கிறது என்பதாகும். தேவனுக்கு முன்பாக தாழ்மையாகவும், ஆத்துமப் பசி மிக்கவர்களாயும் நடவுங்கள். நல்லவர்களாகவும் பழமை நாகரீகம் கொண்டவர்களாயும் இருங்கள்...

171. எசேக்கியேல் 9ம் அதிகாரத்தின்படி, “பரிசுத்த ஆவியினால் முத்திரையிடும்படியாக முதலாவதாக தேவனுடைய தூதன் சென்றபோது, அவன் நகரத்திலே செய்யப்படுகிற சகலவித அருவருப்பு

களினிமித்தமும் பெருமூச்சுவிட்டழுகிற வர்களையே அவன் முத்திரையிட்டான்" என்ற வேதவாக்கியத்தின்மூலம் நான் அதை நிரூபித்துக் காட்டமுடியும். அது சரியா? நகரத்திலே செய்யப்படுகின்ற அருவருப்புகளினிமித்தம் பெருமூச்சு விட்டழுகிற மனுஷரின் நெற்றிகளிலே முத்திரையிட்டான்.

172. இப்பொழுது, நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன், நான் இந்த கேள்வியைக் கேட்கிறேன். (இப்பொ ழுது கூடுமானவரை சீக்கிரமாக நான் முடித்துவிடுகிறேன்) பரிசுத்த ஆவியான வர் தாமே ஜெபர்ஸன்வில், நியூ ஆல்பனி, லூயிவில் ஆகிய இடங்களின் வழியாகச் சென்று இந்த மதிய வேளையில் வீட்டில் இருப்போரை முத்தரித்தால் இன்றைக்கு என்ன நிகழும், "தேவனே கூட்டத்திற்காக

மிகவும் பசியாய் இருப்பவர்களுக்கு எழுப்புதலை அனுப்பும். ஓ, தேவனே, இப்பட்டணத்தின் பாவங்களைப் பாரும் ஓ, அது மிகவும் மோசமானதாய் இருக்கின்றதல்லவா, தேவனே? ஓ, நீர் தயவு கூர்ந்து ஒரு எழுப்புதலை அனுப்ப மாட்டீரோ, தேவனே. ஒரு அருமையான பிரசங்கியை எவராவது, ஒரு வரை அனுப்பும். ஓ, கர்த்தாவே பரிசுத்த ஆவி தாமே...”? எங்கே அவர் முத்தரிப்பார்? அதைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள்.

173. இப்பொழுது, “நல்லது, சகோதரன் பிரன்ஹாம், நீர் என்ன கூற முயல்கிறீர்?”

174. நான் இதைத் தான் பயத்தோடும், வலிமையில்லாத கயிறுகளின்மேல் நடந்த வாறு இதை கூற விழைகிறேன். உள்ளே இருப்பவர்களுக்கு நாளானது முடிவடை

யப் போகின்றது என்று நான் நம்புகிறேன். பாருங்கள்? பாருங்கள்? கதவுகள் மூடிக் கொண்டிருக்கின்றன. உங்களுக்குள்ளே அதைக் குறித்த பாரம் என்பதே இல்லா மலிருக்கின்றது.

175. பில்லிகிரஹாமும், ஓரல் ராபர்ட் ஸூம், நம்மிடையே உள்ள மற்ற எல்லா ரும் தேசம் முழுவதும் கூட்டங்களை நடத்தினோம், நாம் கூறினோம், ஜெபித் தோம், மற்ற எல்லாவற்றையும் செய்தோம். ஆனால், நீங்கள் பாருங்கள், கதவுகள் மூடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. “அசுத் தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்த மாயிருக்கட்டும்.” நான் வேத வசனங்களை மேற்கோடிட்டு காட்டுகிறேன், “அசுத்தமா யிருக்கட்டும். நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்.” புறஜாதியாரின் கதவு

கள் மூடிக்கொண்டிருக்கின்றன என நான் நம்புகிறேன். பாருங்கள்? காலங்களின் நேரம் முடிவடையப் போகின்றது, இன்னும் வரவேண்டியது சிலர் மாத்திரமே. தேசம் முழுவதும் கூட்டங்களை நடத்தினோம், ஆத்துமாவைக் குறித்து பிரசவ வேதனை இல்லாததால்தான் அதைப் போன்று கூட்டங்கள் உங்களுக்கு இருக்கவில்லை. உங்களுக்கு அந்த பாரம் இருக்கவில்லை.

176. அநேக வருடங்களுக்கு முன் சம்பவித்தது என் நினைவிற்கு வருகின்றது, அன்று நடந்ததை அவர்கள் சபையில் பேசுகின்றதை நீங்கள் எப்பொழுதும் கேட்கின்றீர்கள். ஆனால் அதுவோ இன்னுமாய்த் தொடர்ந்திருக்கவில்லை, சிறிதேனும் இல்லை, ஆனால் அன்று அது புதுப்பொலிவுடன் இருந்தது. தேவன் தமது

சபையை அழைத்துக் கொண்டிருந்தார். அவர்கள் கதறி அழுதுக்கொண்டு, விம்மிக் கொண்டு இரவு முழுவதும் பீடத்தின்மேல் விழுந்து கிடந்ததை நான் கண்டிருக்கிறேன். நான் அவர்கள் வீடுகளுக்குச் சென்றிருக் கிறேன். நீங்கள் அவர்கள் வீட்டருகில் வரும்போழுது... ஆணும் பெண்ணுமாக "ஓ, தேவனே" என்று கதறிக் கொண் டிருப்பதை உங்களால் கேட்க முடியும்.

177. அவர்கள் சபையினூடே நடந்து செல்வதை நீங்கள் காணலாம். அப்பொ ழுது, "இயேசுவே கல்வாரியில் என்னை வைத்துக்கொள்ளும்" என்று பியானோ கருவியில் இசைக்கப்படுவதை நான் காண் பேன், அங்கே கண்ணீர் பெருக்கெடுத்து ஓடும், உங்களுக்குத் தெரியுமா. (சகோ. பிரன்ஹாம் சப்தத்தை உண்டாக்குகிறார் - ஆசி) இந்த சபைக்குள் செல்வோம்,

வேறொரு சபைக்கு செல்வோம், “அங்கே அருமையான ஒரு ஊற்று” என்று அங்கே பாடப்படுவதைக் கேட்போம், “ஓ, தேவனே, என்னுடைய மகனைக் காத்த ருளும். என் மகளைக் காப்பாற்றும், அவள் இழந்து போயிருக்கிறாள், கர்த்தாவே, தயை கூர்ந்தருளும்!”

178. அதைப்போன்று இன்று உன்னால் காணமுடியாது. காரணம் என்ன? விலக்கிக் கொண்டுள்ள தேவனுடைய ஆவி இயேசு இதை முன்னறிவித்தார், அவர்களுடைய அன்பு தணிந்து போகும். அக்கிரமம் மிகுதியாவதால் அநேகருடைய அன்பு தணிந்து போகும். பாருங்கள்? பாருங்கள்? குளிர்ந்து போய் அகன்றுவிடுகின்றனர். அன்பு தணிந்துக் கொண்டிருக்கிறது. அவர்கள் வேஷத்தை தரித்து, பியானோ கருவியை மேலும் கீழாக வாசித்து, ஓ,”

அல்லேலுயா! தேவனுக்கு மகிமை! அல்லேலூயா! கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்பார்கள். பாருங்கள், அது வெறும் வேஷமே. அதைப் போன்று உங்களை நீங் களே ஏமாற்றிக் கொள்ளாதீர்கள், பாருங் கள், பாருங்கள், பாருங்கள், பரவாயில்லை நாம்... நான் இப்படிச் சொல்கையில்...

179. நாம் நம்முடைய சபையைக் குறித்து பேசவில்லை, அமெரிக்காவில் நான் கண்டதைக் குறித்தே பேசுகிறேன். அது ஒரு வேஷம் போலாகிவிட்டது, அது நம்மிடையே இருந்ததைப் போன்று ஒரு நடிப்பாக ஆகிவிட்டது. அந்த ஆத்தும பசி, முயற்சியானது ஏறத் தாழ இல்லாமற் போயிற்று. ஓ, சகோதரனே, சகோதரியே (தேவன் நம்மேல் இரக்கமாய் இருப்பா ராக). தேவன் இரக்கமாயிருப் பாராக!.

180. இந்த எழுப்புதல்களையும், மற்ற பலமான காரியங்களையும் நோக்கிப் பாருங்கள், சுவிசேஷமானது தெளிவாகப் பிரசங்கிக்கப்படுகிறது, அது... எழுப்புத லானது முடிவுற்றவுடன் அவர்கள் சென்று விடுவதை இன்றைக்குக் கவனியுங்கள். அது என்னவென்று தெரியுமா?

181. இதை நான் கூறட்டும். நான் ஏன் இதை விடமுடியவில்லை என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் கவனியுங்கள், இயேசு கூறினார், “பரலோக ராஜ்ஜியம் ஒரு மனிதன் கடலிலே போடப் பட்டு சகலவிதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக் கிறது”. அவன் வெளியே இழுத்த போது, கடலில் இருந்த அநேக ஜந்துக்களை எடுத்தான். ஆமைகள், பாம்புகள், நீர் நாய்கள், நண்டு வகைகள், மீன் ஆகிய

வைகள் வந்தன. பாருங்கள், நான் விசுவா சிக்கிறேன் அந்த வலை...

182. இப்பொழுது, கவனியுங்கள்! இங்கே ஒரு ஆமை உள்ளது, இங்கே ஒரு மீன் உள்ளது. அந்த ஆமை, ஆமையாகத் தான் இருக்க வேண்டும், ஏனென்றால் துவக்கத்திலிருந்தே அது ஆமையாகத் தான் இருந்தது. ஆமையினுடைய சுபாவம் தான் அதற்கு அமைந்திருக்கும், அந்த ஒரு சுபாவம் மாத்திரமே அதற்கு இருக்கும். இப்பொழுது நினைவில் கொள்ளுங்கள். (நான் ஜெயிக்கப்போகிறேன் என்று கூறி யிருக்கிறேன்) பாருங்கள், அது துவக்கத் திலிருந்தே ஆமையாகத்தான் இருக்கின் றது, இப்பொழுதும் அது ஆமைதான். பாம்பாக அது துவங்கியிருக்குமென்றால் இப்பொழுதும் அது பாம்பாகத் தான்

இருக்கும். நீர் நாயாக துவக்கத்தில் அது இருந்திருக்குமானால்...

183. அந்த குளத்தில் இருந்த எல்லா மீன்களும் பிடிபடும் வரை அந்த வலையானது போடப்பட்டுக் கொண்டே இருந்திருக்கும் என்று நான் நம்புகிறேன்.

184. அதன் காரணத்தால் அவர்கள், "நல்லது என் கைகளை நான் உயர்த்தி னேன். தேவனுக்கு மகிமை உண்டாவதாக! நான் இரட்சிக்கப்பட வேண்டும். கர்த்த ருக்கு ஸ்தோத்திரம்!" என்று கூறுகின்றனர். அதன் பிறகு சிறிது நாட்கள் கழித்து, "ஓ, லிடியா, அந்த காரியம் உனக்குத் தெரி யுமா, அது... முட்டாள்தனமான ஒன்று. நான் சரியாகத்தான் ஊகித்தேன்" என்று கூறுவர். ஏன்? அதன் சுபாவம் அங்கே

இருக்கின்றது, அதன் ஆரம்பமே நீர் நாயாகவும், சர்ப்பமாகவும் இருந்தது.

185. ஏரியிலிருந்து அந்த மீன் இப் பொழுது எடுக்கப்பட்டிருக்கும், வலை காய்வதற்காக வைக்கப்படும். பிறகு இயேசு வந்து தம்முடைய மீனை எடுத்துக் கொள்வார். நான் என்ன கூற முயல்கிறேன் என்பதைப் பாருங்கள்? ஓ, கிறிஸ்துவத்தின் ஒரு சிறு துளி மாத்திரம் உங்களில் இருந்தால், தேவனுக்கு சேவை செய்ய வேண்டும் என்னும் எண்ணம் சிறிய அளவில் மட்டும் இருந்தால் முடிந்த வரை இக்காலை வேளையில் அதை உறுதியாகப் பற்றிக் கொள்ளுங்கள், உங்கள் இரு தயத்தில் அதை வைத்து களி கூருங்கள்.

186. "தேவகுமாரர் மனுஷ குமாரத்தி களைக் கொண்டார்கள்". நிச்சயமாக

அவர்கள் தேவகுமாரர்தான். இப்பொழுதும் அவர்கள் இன்னுமாய் தேவகுமாரர்களாய் இருக்கின்றனர், ஆனால் அவர்கள் விழுந்து போன தேவகுமாரர். அவர்களில் சிலர் வேதபூர்வமாக இருக்கின்றனர், வியூ அவர்கள் எவ்வாறு வேத வாக்கியங்களைப் பேசுகின்றனர்! அவர்கள் தேவகுமாரர். சாத்தான் தேவனுடைய வலது கரமாக விளங்கியவன் என்று உங்களுக்குத் தெரியுமா. இன்றைக்கு உலகில் உள்ள வேத ஞானிகளைக் காட்டிலும் வேத வாக்கியங்களை அவன் அதிகமாக அறிந்திருக்கிறான் என்பது உங்களுக்குத் தெரியுமா. அதைக் குறித்து பேசி... அவன் வேதகலாசாலைகளை தலைகீழாக ஆக்கிக் கொண்டிருக்கிறான், குறிப்பாக இங்கேயிருந்த பாப்டிஸ்டுகள், “இயேசு கிறிஸ்து ஒரு ரோம போர் வீரனுக்கோ, அல்லது

ஜெர்மானிய போர் வீரனுக்கோ பிறந் திருக்க வேண்டும்” என்று கூறுகின்றனர். அதைக் குறித்த புத்தகத்தை நான் வைத் திருக்கிறேன், வருகின்ற நாட்களில் என் றாவது ஒரு நாளிலே அதை நான் உங்களுக்கு காண்பிப்பேன். அது சரி.

187. முடிவாக யாத்திராகமம்... ஓ நாம் அதை முடிக்கும் வரை அதை புரிந்து கொள்ள முடியாது. சீக்கிரமாக அதை தான் முடிக்கின்றேன். உங்களுடைய நேரத்தை அதிக அளவில் நான் எடுத்துக் கொள்கி றேன் என்று எனக்குத் தெரியும். என்னோடு சிறிது நேரமாக பொறுத்துக் கொள்வீர் களா? (சபையார் “ஆமென்” என்கின்றனர் - ஆசி)



# கேள்வி: 28



# செய்தி: 54-05-15 கேள்விகளும் பதில்களும் COD #4

Q.28. **ஆகவே பரிசுத்த... இன்னுமாக கைகள் வைக்கப்படுதலினால் பரிசுத்த ஆவி அருளப்படுகின்றதா? சீஷர்கள் பேதுரு, பவுல், இன்னும் மற்றவர் அதைச் செய்தனர், அது இன்னும் சாத்தியமான ஒன்றா? பவுல் அதை இந்த விதமாகத்தானே பெற்றான்.**

93. ஆம், அருமை சகோதரனே, சகோதரியே, இந்த - இந்த குறிப்பை எழுதின யாராயிருந்தாலும் சரி. கைகள் வைக்கப்படுதலினாலே முற்றிலுமாக பரிசுத்த ஆவியானது பெறப்பட வேண்டியதாக இருக்கிறது.

94. இப்பொழுது, அநேக மக்கள் என்னை... நான் ஒரு பெந்தெகொஸ் தேயினனாக குறிக்கப்பட்டுள்ளதால், நான் ஒரு பெந்தெகொஸ்தே என்று கூறுகின் றனர். நான் ஒரு பெந்தெகொஸ்தே ஸ்தா பனத்தை சார்ந்தவனாக ஒரு போதும் இருந்ததில்லை. நான் எல்லா ஸ்தாப னங்களிலிருந்து முற்றிலுமாக விடுதலை பெற்றவனாக உள்ளேன், தேவனுடைய உதவியைக் கொண்டு அந்த வழியிலேயே நான் இருக்க முனைகிறேன். ஏனெனில் என்னால் சரியாக அந்த பிளவில் நின்று “நாமெல்லாரும் சகோதரர்! இங்கே வாருங் கள் நாம் ஒன்றாக வழக்காடுவோம்” என்று கூறமுடியும்.

95. தேவனுடைய கிருபையால் நான் முதன்முதலாக முன்பு ஆரம்பித்த போது... இங்கேயிருக்கின்ற ஜனங்களாகிய நீங்கள்,

என்னுடைய செயலாளர்கள் மற்றும் இங்கு அமர்ந்திருக்கக் கூடிய இவர்கள் இன்று உலகில் நான் பத்து இலட்சம் மற்றும் இன்னும் அதிகமான ஜனங்களுடன் நான் தொடர்பு கொண்டிருப்பேன் என்று அறி வார்கள். ஒரு ஸ்தாபனம் துவக்கப்பட்டிருந் தால் அது எப்படியிருந்திருக்கும்! பாருங் கள்? அது சரி. ஆனால் எனக்கு ஒரு ஸ்தாபனம் தேவையில்லை, அது வேதா கமத்திற்கு எதிரானது. ஸ்தாபனத்தில் உள்ள ஜனங்கள் இரட்சிக்கப்பட வேண்டு மென்று என்னால் கூடுமானவரை நான் முயற்சித்துக் கொண்டிருக்கிறேன். அது தான் காரியம். கர்த்தர் ஜனங்களிடத்தில் எனக்கு கொடுத்திருக்கிற செல்வாக்கை ஏதோ ஒரு ஸ்தாபனத்தின் மேல் வைப் பதற்கு பதிலாக, நிச்சயமாக அதை அவருடைய மகிமைக்கென்றே உபயோ

கிப்பேன். அதற்கு உரியவராயிருக்கின்ற இயேசு கிறிஸ்துவின் மேல் அதை நான் வைப்பேன். எந்த ஸ்தாபனமும் உங்களை இரட்சிக்கமுடியாது; அது இயேசு கிறிஸ்து வின் இரத்தத்தினால் மாத்திரமே முடியும்.

இப்பொழுது, கைகளை வைப்பதின் பேரில், இப்பொழுது, சிறிது வித்தியாச மான...

96. இப்பொழுது, அருமையான பெந்தெகொஸ்தே ஜனங்களாகிய நீங்கள், என்னுடன் சண்டைக்கு வராதீர்கள். ஆனால் இப்பொழுது நீங்கள் ஒரு நிலைக்கு வந்து, "நாம் சென்று பரிசுத்த ஆவிக்காக காத்திருப்போம்" என்று கூறி னால், பெந்தெகொஸ்தேயில் என்ன ஒரு வார்த்தை உபயோகப்படுத்தப்பட்டிருக் கிறது!

97. ஆகவே நான் இதைக் கூறுகிறேன்... உங்களுடைய உணர்வுகளை புண்படுத்து வதற்கல்ல. களத்தில் எனக்கு இருக்கும் மிகப்பெரிய உதவி பெந்தெகொஸ்தே ஜனங்கள் தான், ஏனெனில் அவர்கள் தெய்வீக சுகமளித்தல் மற்றும் தேவ னுடைய வல்லமையின் செய்தியை விசு வாசிக்கின்றனர். மற்றவர்கள் தங்கள் மூக்கை அதற்கு நேராக திருப்புவார்கள்.

98. ஆனால் சபைக்கு வெளியே இருக்கின்ற தனிப்பட்ட நபர்கள், நித்திய ஜீவனிற்கு முன்குறிக்கப்பட்டவர்கள், அவர்கள் வருவார்கள். அவ்வளவு தான். ஆனால் முன்குறிக்கப்படாதவர்கள் வர முடியாது; தேவன் அவ்விதமாகக்கூறினார், “அவர்கள் ஆக்கினைக்காக முன்குறிக்கப் பட்டனர்” ஆனால் எந்த ஒருவரும் அழிந்து போக வேண்டும் என்று

அவருக்கு சித்தமல்ல, ஆனால், அவர் தேவனாய் இருப்பதால், அவர்கள் அதை கண்டனம் பண்ணுவார்கள் என்பதை அவர் கண்டார். ஆதலால் அது - அது அவ்வளவு தான், அவர் அதை முன்பாகவே கண்டார். அந்த காரியங்களை காண்பது தான் தேவனுடைய முன்னறிவு ஆகும். இந்த அதே நாளில் சபை எங்கே நின்று கொண்டிருக்கும் என்பதை அவர் முன்னறி வித்தார். தேவன் அதை துவக்கத்தி லிருந்தே அறிவார். சபை இன்று எவ்வித மாக இருந்து கொண்டிருக்கின்றதோ அதை தேவன் உலகத்தோற்றத்திற்கு முன்பாகவே அறிந்திருந்தார். இன்றிரவு நான் இந்த பிரசங்க பீடத்தில் நின்று கொண்டிருப்பேன் என்று உலகத்தின் அஸ்திபாரத்திற்கு முன்பே அவர் அறிந்திருந்தார். அவர்

தேவன்; துவக்கத்திலிருந்து முடிவுவரை அவருக்குத் தெரியும்.

99. இப்பொழுது, இப்பொழுது, பெந்தெகொஸ்தே ஜனங்கள் போதித்துள்ளனர்... இப்பொழுது, அநேகமாக இதன் பேரில் நிறைய காரியங்களை என்னால் எடுக்க முடியும், ஆனால் வார்த்தைக்கு வர வேண்டுமானால் நான் உத்தமமாக இருக்க வேண்டும். “காத்திருத்தல்” (tarrying) என்கின்ற ஒரு காரியமானது ஒருக்காலும் கிடையாது! நீங்கள் தவறில் இருக்கின்றீர்கள். காத்திரு என்றால் “ஜெபி” என்று அர்த்தமல்ல. “எதிர்பார்த்திரு” என்று அர்த்தம். மேலேறிச் சென்ற பிறகு, இயேசு கிறிஸ்துவிற்கு பிறகு... சிலுவையிலறையப்படுதல், பிரகாரம் சுத்தமாக்கப்படுதல். பாவ நிவாரண பலியின் நாளுக்கு பிறகு, உயிர்த்தெழுதல்... அவர் கொல்லப்பட்ட

போது, அது பாவ நிவாரண பலியின் நாள், பிறகு மேலேறிச் செல்வதற்கு முன்பு நாற்பது நாட்கள், பிறகு பெந்தெகொஸ்தே. பெந்தெகொஸ்தே என்ற வார்த்தைக்கு "ஐம்பது" என்று அர்த்தம், பாவநிவாரண பலி செலுத்துதலுக்குப் பிறகு ஐம்பது நாட்கள் என்பதாகும்.

100. பாவநிவாரண பலி செலுத்தப் பட்ட பிறகு, ஒவ்வொன்றும், எழுத்துப் பூர்வமாக, பூகோளரீதியாக, தேவன் கூறியவிதமாகவே ஒவ்வொரு காரியமும் பரிபூரணமாக வந்தாக வேண்டும். ஆகவே பெந்தெகொஸ்தே, அது ஒரு யூபிலி நேரமாக இருந்தது, அறுவடையின் முதற் பலன்களை அவர்கள் கொண்டு வந்த போது, ஒரு யூபிலியைக் கொண்டிருந் தனர்.

101. இப்பொழுது, இயேசு வரும் வரைக்கும் இரண்டாயிரம் ஆண்டுகளாக இருந்தாக வேண்டிய பரிசுத்த ஆவி சபை, அந்த சபையினுடைய முதற்பலன்கள், முதற்பலன் பெந்தெகொஸ்தேயன்று வந் தது. அது பெந்தெகொஸ்தே நேரத்திற்கு பத்து நாட்களுக்கு முன்னதாக அது இருந்தது; அது சுத்தப்படுத்தப்பட்ட பிறகு, பலியானது கொல்லப்பட்ட பிறகு, இயேசு கிறிஸ்து மேலேறிச் செல்லுதல் வரைக்கும் நாற்பது நாட்களாக இருந்தது. அவர் "எருசலேம் வரை சென்று உன்னதத்தி லிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப் படும் வரைக்கும் காத்திருங்கள்." என்றார். அப்போஸ்தலர் -1...

102. அப்போஸ்தலர் -2, "பெந்தெ கொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு

ஓரிடத்திலே வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்கு தந்தருளின வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்.”

103. ஆகவே அப்பொழுது வெளியே இருந்த மதம் உலகம் அந்த மகத்தான வைதீக சபைகள், வந்து இந்த ஜனங்கள் தள்ளாடி குடித்து வெறித்த மக்களைப் போல இருந்ததைக் கண்டனர். ஆகவே அவர்கள் வந்து இவர்களைப் பார்த்து சிரித்து கேலி செய்து, “இந்த கலிலேயக் கூட்டத்தினரைப் பாருங்கள்! இவர்கள் எல்லாரும் குடித்து வெறித்துள்ளனர்!”

என்றனர். தவறான புரிந்து கெள்ளுதலைப் பார்த்தீர்களா?

104. என்னுடைய கத்தோலிக்க நண்ப னுக்கு கூறுகிறேன், அந்த ஆசீர்வதிக் கப்பட்ட கன்னிமரியாள் அங்கே இவர் களுடன் இருந்தாள். சகோதரியே, பரிசுத்த ஆவியை பெற்று கொள்ளாமல் அவள் பரலோகத்திற்கு வர தேவன் அனுமதிக்க மாட்டாரானால், அந்த விதமாக இருக்கு மானால், அதை விட குறைவான ஒன்று உங்களை அங்கே கொண்டு செல்லும் என்று நீங்கள் நீனைக்கிறீர்களா? இல்லை. ஆகவே நம்முடைய வீண் பெருமையான வீம்பான காரியத்தை விட்டுவிடுவோமாக, அதை நாம் விட்டு விடுவோமாக.

105. சொல்வதற்கென உலகம் வைத் திருப்பவைகளுக்கு எந்தவித கவனத்தை

யும் செலுத்த வேண்டாம்! தேவன் சொல்வதற்கென வைத்திருப்பவை களையே நாம் கவனிக்க வேண்டும். இது தான் தேவனுடைய வார்த்தையாகும். இந்த வரைபடத்தின்படியே தான் நாம் அதை கட்டவேண்டியவர்களாகவுள்ளோம், ஏனெனில் அவர் பேதுருவிடம் “இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை,” என்று கூறினார். எல்லா காரியமும் நடந்தேறும். பாதாளத்தின் வாசல்கள் அதற்கு எதிராக இருக்கும் என்று அது காண்பிக்கிறது, ஆனால் அதை மேற்கொள்ளமுடியாது. அதை நிறுத்திவிடலாம் என்று மக்கள் நினைக்கின்றார்களா? நீங்கள் சூரியனைக் கூட விரைவாக நிறுத்திவிடலாம். அது சரி. அதையோ உங்களால் நிறுத்த முடியாது. அது முன் செல்ல

வேண்டுமென்று தேவன் நியமித்திருக்கின்றார்.

106. இங்கே நான் முதன்முதலாக நான் மனம்திரும்பினேன், அங்கே பின்னால் இருக்கின்ற என்னுடைய ஏழை தாயும் கூட எனக்கு பைத்தியம் பிடித்து விட்டது என்று எண்ணினார்கள். என்னுடைய மாமியாரும் “அவன் மனநல காப்பகத்திற்கு கொண்டு செல்லப்படவேண்டியவனாக இருக்கிறான்” என்று கூறினார்கள். அந்த நகரத்தின் பிரசங்கிகள், “இன்னும் சீக்கரத்தில் எரிந்து போய்விடுவான்,” என்றனர். நான் நீண்ட காலமாக எரிந்து கொண்டிருக்கிறேன். அது இன்னுமாக - இன்னுமாக எரிந்து கொண்டிருக்கிறது, எந்நேரத்திலும் இன்னும் பிரகாசமாக. ஏன்? அது அணைந்து போக முடியாது, அது தேவன் ஆகும்! எரிந்து அணைந்து போவதற்கு பதிலாக, அது

இப்பொழுது உலகம் முழுவதுமாக பரவிக் கொண்டிருக்கிறது.

107. இருபத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்னர், ஓஹையோ நதியண்டையில். இங்கே சரியாக ஓஹையோ நதியில் நான் ஞானஸ்நானம் கொடுத்து கொண்டிருக்கும் போது அதே காரியத்தைதான் அவர் கூறினார், உங்களில் அநேகர் அங்கே நின்று கொண்டிருந்தீர்கள், அந்த ஒளி, தூதன், நாங்கள் எங்கேயிருந்தோமோ அந்த இடத்திற்கு நேராக கீழே வந்து, "இயேசு கிறிஸ்துவின் முதல் வருகைக்கு முன்னோடியாக யோவான்ஸ்நானகன் அனுப்பப்பட்டது போல, உன்னுடைய செய்தியும் இயேசு கிறிஸ்துவின் இரண் டாம் வருகையை கொண்டு வரும்," என்றார். ஆகவே அது அதைச் செய்தது. அது... அவர் இன்னுமாக வரவில்லை,

ஆனால் அது என்ன செய்திருக்கிறது என்பதைப் பாருங்கள், அது உலகம் முழுவதுமாக எங்கும் பரந்தகன்று சென்றிருக்கின்றது. பாருங்கள்? ஆகவே இன்று இப்பொழுது, சற்று சிந்தியுங்கள், சென்றுள்ள பிரயாசத்தினால், பல இலட்சக் கணக்கானவர் வந்துள்ளனர்.

108. அந்த பிராயசத்தினால் தான் எத்தனை இலட்சக்கணக்கானவர்கள் வந் தனர் என்று கத்தோலிக்க பத்திரிக்கையான ஞாயிறு வருகையாளர் கூட அதைக் குறித்து கூறியுள்ளது.

109. மற்றவர்கள் அதை கேட்டு, “அது தான் சத்தியம்! இந்த உலகக் காரியங் களினின்று சரியாக தன்னை இப்பொழுது அகற்றிச்சென்று உண்மையான சுவிசே

ஷத்தை பிரசங்கிக்க நான் தயாராக இருக்கிறேன்” என்று கூறுகிறார்கள்.

110. அதன் காரணமாக தான் அவர்கள் நம்மை “முழு சுவிசேஷம்” என்று அழைக்கின்றனர், அவர்கள் முழு சுவிசேஷத்தை கேலிக்கூத்தாகச் செய்கின்றனர். ஆனால், சகோதரனே, ஒன்றுமில்லாத பாதி எனக்குத் தேவையில்லை, நான்... அது எனக்கு முழு காரியமாக இருக்க வேண்டும். அதில் ஒரு பாகம் நன்றாக இருக்குமானால், அதின் மற்றைய பாகமும் நன்றாக இருக்கும். அந்த முழுமையான சுவிசேஷம்!

111. இப்பொழுது, கவனியுங்கள், பரிசுத்த ஆவியானவர் திரும்பவுமாக அங்கே வந்தார். பெந்தெகொஸ்தே ஜனங்கள் காத்திருந்தனர், “அங்கே பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல வானத்தி

லிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி நிரப்பிற்று”.

112. அதற்கு பிறகு ஒரு முறை கூட அவர்கள் காத்திருக்க வேண்டிய அவசியம் அவர்களுக்கு இருக்கவில்லை. பேதுரு இந்த வார்த்தைகளை புறஜாதிகளுக்கு பேசின போது, அவர்கள் ஞானஸ்நானம் பண்ணப்படுவதற்கு முன்பே பரிசுத்த ஆவி அவர்கள் மேல் இறங்கினார், அது சரியா? சற்று, அப்போஸ்தலர் -10:49.

ஆனால் இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக் கொண்டிருக்கையில் வச னத்தை கேட்டவர்கள்... யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அவர் கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும், தேவனை புகழுகிறதையும் கேட்ட போது

பேதுருவோடே கூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள... விசுவாசிகள் கேட்ட போது பரிசுத்த ஆவியின் வரம் புறஜாதிகள் மேலும் பொழிந்தருளப் பட்டதைக் குறித்து... பிரம்மித்தார்கள்.

அப்பொழுது பேதுரு: துவக்கத்தில் நமக்கு நடந்தது போல பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும்... காண்கையில் எவராகிலும் தண்ணீரை விலக்கலாமா?

ஆகவே அவன் இயேசு கிறிஸ்துவி னுடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கட்டளை யிட்டான்...!

113. அது சரி; காத்திருத்தல் இல்லை; காத்திருத்தல் இல்லை. அந்த அப்போஸ் தல வழி, தேவனுக்கு எந்தவித குறிப்பிட்ட


வகுத்துரைக்கப்பட்ட ஒழுங்கு முறை கிடையாது; இருதயம் பசியாயிருக்கையில், நீ எதற்காக பசி கொண்டிருக்கிறாயோ அதை அவர் உனக்கு தருவார். உனக்கு பரிசுத்த ஆவி தேவையாயிருக்குமானால், சரியாக இப்பொழுதே உன் மேல் இறங்க அவரால் முடியும்.

114. பேதுரு, அவன் பிரசங்கிக்க சென்ற போது, ராஜ்ஜியத்தின் திறவுக் கோல்களை பேதுரு வைத்திருந்தான். இன்னும் சில நிமிடங்களில் அதைக்குறித்து பார்க்கப்போகின்ற ஒரு கேள்வியை நான் வைத்திருக்கிறேன். அவன் ராஜ்ஜியத் திற்குரிய திறவு கோல்களை கொண்டிருந் தான். அவன் அதை கொர்நேலியுவின் வீட்டிற்குத்திறந்தான். அவன் சமாரியர் களுக்கு அதை திறந்தளித்தான், இங்கே அதை அவன் திறந்தளித்தான்; ஆனால்

பிலிப்பு அங்கே சென்று அவர்களுக்கு பிரசங்கித்து அவர்களை இயேசு கிறிஸ்து வின் நாமத்தில் ஞானஸ்நானம் பண்ணு வித்தான், பிறகு பேதுரு வந்து அவர்கள் மேல் கைகளை வைத்தான் என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஆகவே, இப்பொழுது, அவன் ஒன்றைச் செய்தான், ஏனெனில் அங்கே இருந்த அந்த மந்திரவாதி... அங்கே சிமியோன் என்ற மாயவித்தைக்காரனை அவர்கள் கொண் டிருந்தனர், அவன், “நான் சிறிது பணத்தை உங்களுக்கு தருகிறேன், அதாவது நான் எவன் மீது கைகளை வைக்கிறேனோ அவன் பரிசுத்த ஆவியை பெறத்தக்கதாக அந்த வரத்தை எனக்கு கொடுங்கள்” என்றான். அது சரியா? ஏதோ ஒரு காரியம் சம்பவித்தது! (தங்கள் கழுத்துப் பட்டை களை பின்புறமாக திருப்பிக் கொண்டு,

வந்து அவர்கள் மேல் கைகளை வைத்து "நான் உனக்கு அப்போஸ்தல ஆசீர்வா தத்தை தருகிறேன்" என்று கூறிகின்ற இந்த பேராய பிஷப்புகள் அல்ல) பேதுரு தன் கைகளை அவர்கள் மீது வைத்தபோது ஏதோ ஒன்று சம்பவித்தது; அது இன்னு மாக சம்பவிக்கின்றது.

115. கைககள் வைக்கப்படுகையில், பரிசுத்த ஆவி அவர்கள் மேல் விழும் போது, அவர்கள் ஈக்களைப் போல கீழே விழுவதை நான் கண்டிருக்கிறேன். ஆம். அதுதான் கைகளை வைப்பது என்பதற் குரிய அப்போஸ்தல உபதேசம் ஆகும். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. இதிலிருந்து சிறிது வித்தியாசப்பட்டவராக நீங்கள் இருந்தால், நாளை இரவு ஒரு சிறு குறிப்பை மாத்திரம் எனக்கு எழுதுங்கள். சரி.





# பரிசுத்த ஆவி என்பதின் பேரில் கேள்விகளும் பதில்களும்

2



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து